**அமெரிக்கத் தூதரகம், கொழும்பு**
**கலாச்சாரப் பாதுகாப்புச் செயற்திட்டத்திற்கான தூதுவர்கள் நிதியத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில்**
**தூதுவர் ஜுலீ ஜே. சங் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்**
**மத்திய கலாச்சார நிதியத்தின் கடல்சார் தொல்பொருள் நூதனசாலை, காலி**
**2022, டிசம்பர் 13**

புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர்,
தொல்பொருள் திணைக்களம் மற்றும் மத்திய கலாச்சார நிதியத்தைச் சேர்ந்த அதிகாரிகள்,
கடல்சார் தொல்பொருள் பிரிவு மற்றும் பாதுகாப்பு ஆய்வுகூடத்தின் உறுப்பினர்கள்,
கடல்சார் தொல்பொருள் நூதனசாலை அதிகாரிகள், ஏனைய மதிப்புமிக்க விருந்தினர்கள்,
நண்பர்கள், பங்காளர்கள் மற்றும் ஊடகத்துறை உறுப்பினர்கள் -

உங்களனைவருக்கும் இனிய காலை வணக்கம். அழகிய காலிக் கோட்டைக்கு மீண்டும் வருகைதருவது மகிழ்ச்சியளிக்கிறது. இன்று காலை இங்கு வரும் வழியில், கடற்கரையோரம் மற்றும் மின்னும் கடலின் ஒரு காட்சியை நான் கண்டேன், எனவே கலாச்சாரப் பாதுகாப்பிற்கான அமெரிக்க தூதுவர்கள் நிதியத்தின் ஒரு புதிய செயற்திட்டத்தின் தொடக்கத்தை அறிவிப்பதற்காக இன்று உங்களுடன் இணைவதற்கான ஒரு சிறந்த இடமாக இது தெரிகிறது. இலங்கையிலுள்ள கொடவாய கப்பல் சிதைவுத் தளத்தில் வெளிப்படுத்தப்பட்ட கலைப்பொருட்களை விஞ்ஞானபூர்வமாக ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான செயற்திட்டத்தினை தொடங்கிவைப்பதற்காக இங்கு, இந்த கடல்சார் தொல்பொருள் நூதனசாலையில் அமைச்சின் செயலாளருடன் இணைந்து நிற்பதில் நான் பெருமையடைகிறேன்.

அடுத்து வரும் இரண்டு வருட காலப்பகுதியில், மத்திய கலாச்சார நிதியத்தின் கடல்சார் தொல்பொருள் பிரிவு தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ள கொடவாய கப்பல் சிதைவுகளை ஆவணப்படுத்தி பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளும். இலங்கையின் அறியப்பட்ட மிகவும் பழமையான கப்பல் சிதைவுத் தளங்களில் ஒன்றான இதில் தொல்கலைச் சின்னங்கள் ஆரம்பத்தில் 2008 ஆம் ஆண்டு இரண்டு இலங்கை மீனவர்கள் மற்றும் சுழியோடிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு, கடல்சார் தொல்பொருள் பிரிவு அப்பாதையைப் பின்தொடர்ந்து கப்பல் சிதைவினைக் கண்டுபிடித்ததுடன் அந்த இடத்தைப் புரிந்துகொண்டு அதைப் பாதுகாக்கும் முயற்சியை ஆரம்பித்தது. நீருக்கு அடியில் 32 மீட்டர் ஆழத்தில் கடலின் அடித்தளத்தில் ஒரு கப்பல் சிதைவு நிலைகொண்டிருப்பதை கற்பனை செய்து பாருங்கள். தொல்கலைச் சின்னங்களை ஆவணப்படுத்தவும், பேணவும் மற்றும் பாதுகாக்கவும் கடல்சார் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுழியோடுவதன் மூலம் அங்குதான் செல்ல வேண்டும். கப்பலின் ஆரம்ப இடம், அதன் உள்ளடக்கங்கள் மற்றும் அது நீரில் எவ்வாறு மூழ்கியது போன்ற சில முக்கியமான மர்மங்களுக்கு இவ்வாராய்ச்சி ஒரு நாள்

பதிலளிக்கலாம். அது எளிதான பணி - அல்லது எளிதான சுழியோடுதல் அல்ல – எனினும் அது ஆழமான அர்த்தமுள்ள மற்றும் உண்மையிலேயே முக்கியமான பணியாகும். அதை ஒரு நாள் நான் நேரில் பார்க்க முடியும் என நம்புகிறேன்.

இந்த முக்கியமான கப்பல்சிதைவை ஆவணப்படுத்தி பாதுகாக்கும் முயற்சியில் இலங்கை கடல்சார் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிசெய்வதில் அமெரிக்கா பெருமையடைகிறது. இந்த செயற்திட்டம் விரைவாக எமது கற்பனையினைக் கவர்வதுடன் இதில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் விடைகாண வேண்டிய பல கேள்விகள் உள்ளன. இத்தளத்தை ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எதைக் கண்டறிந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம்: இந்தோ-பசிபிக் முழுவதும் உள்ள ஆய்வாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நாடுகளின் ஒரு வர்த்தகப் பங்காளராக, ஒரு நண்பராக, மற்றும் பாதுகாப்பான மற்றும் திறந்த துறைமுகங்களின் ஒரு கலங்கரை விளக்காக இலங்கை வகிக்கும் நீண்டகால மற்றும் இன்றியமையாத பங்கை கொடவாய கப்பல் சிதைவின் இருப்பு மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அது ஒரு வியக்கத்தக்க முக்கியமான நற்பெயராக இருப்பதுடன் இன்றுவரை இலங்கைக்குத் தொடர்ந்தும் பயனுள்ளதாகவும் இருக்கிறது.

கொடவாய கப்பல் சிதைவின் வரலாறு கி.மு. முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்குப் பின்னோக்கிச் செல்லும் அதே வேளையில், இங்கு காலியில் நிற்பதானது என்னை மிகவும் சமீபத்திய வரலாற்றைச் சிந்திக்க வைக்கிறது. இலங்கைத்தீவில் அமெரிக்காவின் முதலாவது முறையான பிரசன்னமாக அமைந்த அமெரிக்க வர்த்தக முகவரமைப்பின் முதலாவது அலுவலகம் 1870ஆம் ஆண்டு வரை இங்கு காலியில் அமைந்திருந்தது. அங்கிருந்து நாம் வெகுதூரம் வந்துவிட்டோம்; சில மாதங்களுக்கு முன்புதான் கொழும்பிலுள்ள ஒரு புத்தம் புதிய, சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட கட்டிடத்திற்கு எமது தூதரகத்தை நான் மாற்றினேன். அது உண்மையில் இலங்கை மக்களின் நலன்கள் தொடர்பாக நாம் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டிற்கான ஒரு சான்றாகும். இன்னும் ஓரிரு மாதங்களில், எமது இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடத் தொடங்குவோம்.

அந்த உறவின் நீண்ட ஆயுளும் அதன் ஆழமும் எனக்கு முக்கியம். கொடவாய செயற்திட்டம் என்பது ஒருமுறை மாத்திரம் மேற்கொள்ளப்படும் ஒரு விடயமல்ல. மாறாக, கடந்த 17 வருடங்களாக அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து மேற்கொண்ட பன்னிரண்டிற்கும் மேற்பட்ட கலாச்சார பாதுகாப்பு செயற்திட்டங்களின் வரிசையில் இது சமீபத்தியதாகும். இதற்கு முன்பு மேற்கொண்ட செயற்திட்டங்களில் அனுராதபுரத்தில் உள்ள யுனெஸ்கோ உலக மரபுரிமைத் தளத்தில் அமைந்துள்ள மடாலயங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் ஆதிவாசி, தமிழ் இந்து மற்றும் பௌத்த சமூகங்களின் அழிந்து வரும் நான்கு பாரம்பரிய மற்றும் பூர்வீக சடங்கு இசை மற்றும் நடன வடிவங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கைவினைத்திறன்களைப் பாதுகாப்பதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட ஒரு செயற்திட்டம்

ஆகியவையும் உள்ளடங்கும். இந்த ஆண்டின் ஆரம்பத்தில், உலகெங்கிலுமிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் வளமான கலாச்சார மரபுரிமை தொடர்பான அவர்களது புரிதலையும் அறிவையும் அதிகரிப்பதற்கு உதவும் வகையில், பழைய கண்டி அரசர்களின் அரண்மனையைப் பாதுகாப்பதற்கும் தொல்பொருள் நூதனசாலையினை மேம்படுத்துவதற்குமான ஒரு பல்லாண்டு செயற்திட்டத்தின் திறப்பு விழாவில் மகிழ்ச்சியுடன் பங்கேற்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஒட்டு மொத்தமாக, இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் அமெரிக்காவிடமிருந்தான 1 மில்லியன் டொலர் நிதியுதவியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இலங்கையின் அற்புதமான மற்றும் மதிப்புமிக்க கலாச்சார பாரம்பரியத்தை இனங்காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும், அவற்றை கௌரவிக்கும் மற்றும் அவற்றிற்கு நிதியளிக்க உதவும் ஒரு தூதுக்குழுவை வழிநடத்துவதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். கலாச்சாரப் பாதுகாப்பிற்கான தூதுவர்கள் நிதியத்தின் பிரதான நோக்கமும் இதுதான். உள்ளூர் நிபுணர்களால் அடையாளம் காணப்பட்டு இலங்கையர்களால் மேற்கொள்ளப்படும் இது போன்ற செயற்திட்டங்களுக்கு அனுசரணை வழங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். உங்களது முயற்சிகள் சுற்றுலாத் துறையின் எதிர்காலத்திற்கு வழிகோலும் அதேவேளை தொல்பொருட்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு வரலாற்றைப் பற்றிய எமது புரிதலின் திறனையும் விரிவுபடுத்துகிறது மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் அடுத்த தலைமுறையின் திறனையும் அது அதிகரிக்கிறது. இச்செயற்திட்டத்தின் பொறுப்புணர்வுள்ள மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த செயன்முகமைக்கு நன்றி. அடுத்த வருடம் உங்கள் குழுவினர் இன்னும் அதிக முன்னேற்றம் அடைந்ததன் பின்னர் உங்களை ஹம்பாந்தோட்டையில் சந்திப்பதற்கு நான் எதிர்பார்க்கிறேன்.